

1974ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக இருந்த அந்தக் காலகட்டத்தில் ஆதி திராவிட மக்களுக்கு இலவசமாக கான்கிரீட் வீடுகள் கட்டித் தரும் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அறிவித்து இரண்டாண்டு காலத்திலே ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டுமென்று திட்டமிட்டு

## இந்தியாவிலேயே ஏற்றுக் கொள்ளப்பட்ட

# ஆதிதிராவிட மக்களுக்கான இலவச கான்கிரீட் வீடுகள் கட்டும் திட்டம்!

திட்டம் 74ஆம் ஆண்டு தொடங்கி ஒன்றரை ஆண்டுக்காலத்திலே 35,000 வீடுகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசமாக கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்பட்டு -பிறகு ஆட்சி கலைக்கப்பட்ட காரணத்தால் அந்தத் திட்டத்திலே தொய்வு ஏற்பட்டு, மீண்டும் 89-90இல் நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அந்தத் திட்டம் வேகமாகச் செயல்படுத்தப்பட்டு இப்போது மீண்டும் அந்தத் திட்டம் அகில இந்தியாவிலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டு-மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்கு ‘இந்திரா காந்தி நினைவு வீடு கட்டும் திட்டம்’ என்று பெயர் வைக்கப் பட்டுள்ளது.



நான் அந்தத் திட்டத்தின் பெயரைப் பற்றிக் கவலைப் படவில்லை. திட்டம், திட்டமாக இருந்தால் போதும் என்பதுதான்.

அந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒரு தொகை தருகிறது. மாநில அரசு ஒரு தொகை ஈடு செய்கிறது.

அதுவும் போதாமல், அந்தத் தொகுப்பு வீடுகளுக்கெல்லாம் ஆதி திராவிட மக்களுக்கு சாதாரண வீடுகளாக இருக்கக் கூடாது. கான்கிரீட் தளம் வேண்டுமென்பதற்காக ஏறத்தாழ 11,000 ரூபாயை அந்த அரசு வீடுகளுக்காக தமிழக அரசு செலவழிக்கின்றது.

### மாநிலங்களிலிருந்து வசூலிக்கப்படும் வரிதான் மத்தியில் குவிந்துக்கிடக்கிறது!

மாநில அரசு செலவழித்தாலும், மத்திய அரசு செலவழித்தாலும் இரண்டும் மக்கள் பணம்தான். அதை நானும் மறந்துவிடக் கூடாது. மத்தியிலே இருப்பவர்களும் மறந் துவிடக் கூடாது.

மத்தியிலிருந்து பணம் கொடுக்கிறோம். என்று சொல்வார்களானால், மாநிலங்களி லேயிருந்து வசூலிக்கப்படுகின்ற வரிதான் மத்தியிலே குவிந்து, அங்கிருந்து இங்கே வருகிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

**-முத்தமிழறிஞர் கலைஞர்**





முதுபெரும் எழுத்தாளர்
**சாவி**

‘முதல்வராக அவர் பதவி ஏற்ற முதல் நாள் ஒரு மாலையுடன் நான் கோட்டை அலுவலகத்துக்குப் போயிருந்தேன். முதலமைச்சர் அறைக்கு வெளியே முக்கிய தொழிலதிபர்கள் உட்பட ஐம்பது அறுபது பேர் காத்திருந்தார்கள்.

“முதலில் சாவியை வரச் சொல்லு” என்று உதவியாளரிடம் கலைஞர் உத்தரவிட்டி ருக்க வேண்டும். உதவியாளர் வந்து என்னை முதலமைச்சர் அறைக்கு அழைத்துச் சென்றார். ஒரு எழுத்தாளனுக்கு அவர் முதலிடம் தந்தார் என்பதை விட ஒரு உண்மையான நண்பனுக்கு அவர் எத் தனை முக்கியத்துவம் தந்தார் என்பது தான் அதற்குப் பொருள்.



# “பராசக்தி” பரபரப்பாக பேசப்பட என்ன காரணம்?

‘சாந்தா அல்லது பழனியப்பன்’ இதுதான் கலைஞர் அவர்கள் எழுதிய முதல் நாடகம்.

எம்.ஆர்.ராதா உதவி யுடன் அந்த நாடகத்தை திருவாரூரில் கலைஞர் நடத்தினார். அந்த நாடகத்தில் கலைஞரும் நடித்தார். நாடகம் நடத்தியதில் கலைஞருக்கு 100 ரூபாய் கடன் ஆகிவிட்டது.

அப்போது நாகப்பட்டினத்தில் பண வசதி படைத்த ஆர்.வி.கோபால் என்பவரிடம் கடன் கேட்டிருக்கிறார். அதற்கு அவர், ‘இந்த நாடகத்தை என் பெயருக்கு எழுதி கொடுத்துவிடு’ என கூறியுள்ளார். அதேபோல் நாடகத்தை அவருக்கு எழுதி கொடுத்து கடனை அடைத்தார் கலைஞர். பராசக்திக்கு முன்பு பல படங்களுக்கு வசனம் எழுதினாலும் பராசக்தி பெருமளவில் பரபரப்பாக பேசப்பட என்ன காரணம் என கலைஞரிடம் நான் கேட்டேன். அதற்கு, ‘அந்த சமயத்தில் புராண படங்களே வெளிவந்தன. தேசபக்தி படங்கள் வந்தாலும் அவை நன்றாக இருந்தாலும் அதில் கருத்து சொன்ன விதம் சரியில்லை. பராசக்தி வெளிவந்த பிறகு அதனால் உண்டான திருப்பத்தை விட அதற்கு ஏற்பட்ட எதிர்ப்பே அந்த படத்துக்கு புகழ் சேர்த்தது’ என்றார்.



நடிகர்
**சிவக்குமார்**



புரட்சித் தமிழன்
**சத்தியராஜ்**

1986ஆம் ஆண்டில் நானும் அதிக படங்களில் நடித்துக் கொண்டிருந்தேன். அதில் அதிக படங்கள் இயக்குநர் மணிவண்ணன் இயக்கத்தில் தான் இருக்கும். அச்சமயம் எம்.ஜி.ஆர் ஆட்சியில் இருந்தார். ஒரு நாளில் இயக்குநர் மணிவண்ணன் என் னிடம் வந்து நாம் இருவரும் சேர்ந்து ஒரு படத்தில் கைகோர்க்கலாம் என்று சொன்னார். நானும், அதற்கென்ன.. எப்போது படப்பிடிப்பு என்று மட்டும் சொல்லுங்கள், வருகிறேன் என்றேன். ஆனால், அந்த படத்தில் கலைஞர் வசனம் எழுதும் சிறப்பு இருக்கிறது என்றார்.

அவருடைய வசனத்தை பேசித்தானே சினிமாவிற்கு வந்தோம் என்று எண்ணி உடனே சரி என்று சொன்னேன். ஆனால், அந்த நேரத்தில் நான் பெரியார் கொள்கைக்காரன் என்றோ எம்.ஜி.ஆர் ரசி கன் என்றோ யாருக்கும் தெரியாது. நான் கலைஞர் வசனத்தில் நடிப்பது என்னைச் சுற்றி இருந்தவர்களுக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை.

அதனால் பாலைவன ரோஜாக்கள் படத்தில் நான் நடிப்பதை தடுக்க பல பேர் முயற்சி செய்தார்கள். நான் இந்த படத்தில் நடித்தால் என்னை தி.மு.க.காரன் என்று பேர் குத்தி விடு வார்கள் என்று சொன்னார்கள்.

நானும், எம்.ஜி.ஆர், சிவாஜி இவர்களுடைய முதல் படம் கலைஞர் வசனத்தில் உருவான படம் தான். அதனால் எந்த பிரச்சினையும் இல்லையே என்றேன். என்னிடம் இருந்த உதவியாளர் நான் வழக்க மாக வாங்கும் சம்பளத்தை விட அதிகமாகக் கேட்டார். அதற்கும் கலைஞரின் பூம்புகார் நிறுவனம் சரி என்றது. அதற்கும் ஒரு படி மேல் என்னிடம் இருந்தவர், ‘கலைஞர் வசனம் எழுதி சில படங்கள் சரியாக ஓடவில்லை. கலைஞர் எதிர்க்கட்சி தலைவராக இருக்கிறார். அத னால் அவருக்கு நேரம் சரியில்லை. இந்த நேரத்தில் நீங்கள் நடிக்கணுமா?’ என்று கேட்டார்.

அப்போதுதான் நான் இந்த படத்தில் கண்டிப்பாக நடிக்கணும் என்றேன். நான் ஒரு பெரியாரியவாதி. அதனால் இது போன்ற நம்பிக்கை இல்லை என்று அப் போதுதான் முதல் முதலில் சொன்னேன். எதற்கும் பயப்படாதவன், இந்த நேர காலத் திற்கு பயப்படுவான்? அதனால்தான் கலை ஞர் வசனத்தில் பாலைவன ரோஜாக்கள் படத்தில் நடிக்கும் வாய்ப்பை எனக்கு அளித்தது தந்தை பெரியாரின் கொள்கைதான்.

அப்படி அந்த பாலைவன ரோஜாக்கள் படத்தின் படப்பிடிப்பு ‘முரசொலி’ அலுவல கத்தில்தான் நடந்து கொண்டிருக்கிறது. 4 ஆம் நாள் படப்பிடிப்பின்போது கலைஞர் வருகிறார் என்ற செய்தி கேட்டவுடன் உடனே கலைஞரிடம் போய் பேசினேன். அப்போது ஏற்பட்ட பழக்கம் அடுத்து அவர் எழுதிய “மண்ணின் மைந்தன்” படத்திலும் நான் நடித்தேன். “பெரியார்” படத்தில் நான் நடித்த போது கூட கலைஞர் என்னிடம் மிக வும் நெருக்கமாகப் பழகினார்.



# கலைஞர் வசனத்தில் ‘பாலைவன ரோஜாக்கள்’ படத்தில் நடிக்கும் வாய்ப்பை எனக்கு அளித்தது...!